இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

# விலைமனுக் கோரல்

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு 50 மடிக் கணினிகளை (Laptop Computers) வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் பராமரிப்புக்காக வழங்குநர் ஒருவரை தெரிவுசெய்தல்

**ஒப்பந்த இல.: DIE/PRO/06/2024/11**

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு 50 மடிக் கணினிகளை (Laptop Computers) வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் பராமரிப்புக்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. இதற்காக மீளளிக்கப்படாத ரூ. 8000.00 கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஶ்ரீ சுபூத்திபுர வீதி, 'சுஹுருபாயா', 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2024.04.29 ஆம் திகதி முதல் 2024.05.20 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.
4. இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை தொலைபேசி இல.: 011-2101559 க்கு அழைக்க முடியும். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2024.04.29 ஆம் திகதி முதல் 2024.05.20 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு வருகைத் தந்தோ அல்லது இணையதளத்திலோ (www.immigration.lk) பரீட்சிக்க முடியும்.
5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 'மூலப்பிரதி' மற்றும் 'இணைப்பிரதி' என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024.05.21 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமுகமளித்து 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அதற்காக வைக்கப்படுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் IFB இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்களக் கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**'சுஹுருபாயா',**
**05 ஆம் மாடி,**
**ஶ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

**தலைவர்**
**திணைக்களக் கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**'சுஹுருபாயா',**
**05 ஆம் மாடி,**
**ஶ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**